செ.வெ.எண்.604

செய்தி வெளியீடு – 21.7.2010

# சென்னை மாநகராட்சி செயல்படுத்தி வரும் பள்ளிச் சிறார் கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் 5,186 மாணவ மாணவியர்க்கு 20 இலட்சம் ரூபாய் செலவில் இலவச கண் கண்ணாடிகள் !

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் இடையே கண்பார்வைக் குறைபாடுகள் உள்ளனவா எனக் கண்டறிந்து, அவற்றைப் போக்குவதற்கு உரிய மருத்துவ உதவிகளை அளித்திட வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், "பள்ளிச் சிறார் கண்ணொளி காப்போம் திட்டம்" எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இந்தத் திட்டத்தின்படி தமிழகத்தில் உள்ள பள்ளிக் குழந்தைகளின் கண்பார்வைக் குறைபாடுகளை நீக்கிடத் தேவையான மருத்துவ உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

சென்னை மாநாகராட்சிப் பகுதியில் செயல்பட்டு வரும் சென்னைப் பள்ளிகள், அரசுப் பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றில் ஆறு, ஏழு, எட்டு ஆகிய வகுப்புகளில் பயிலும் ஒரு இலட்சத்து 412 மாணவ மாணவியர்க்குக் கண் மருத்துவ நிபுணர்கள் மூலம் கண்பரிசோதனைகள் செய்யப்பட்டன. அப்பரிசோதனைகளின் வாயிலாக 9,500 குழந்தைகளுக்குக் கண்பார்வையில் குறைபாடுகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் குழந்தைகளின் கண்பார்வையைக் காப்பதற்காகவும், இவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும் சென்னை மாநாகராட்சி மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின் பயனாக – முதற்கட்டமாக 5,186 மாணவ மாணவியர்க்கு 20 இலட்சம் செலவில் கண் கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்

இன்று (21.7.2010) புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 20 குழந்தைகளுக்கு இலவசக் கண் கண்ணாடிகளை வழங்கி, இப்பணிகளைத் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, சென்னை மாநகராட்சி, 20.8.2009 முதல் ஆயிரம் விளக்கு பகுதியில் தொடங்கி நடத்தி வரும் தசைத் திறன் குறைபாடு உள்ளவர்களுக்கான சிறப்புப் பள்ளியில் பயிலும் குழந்தைகளை, அவர்களின் பெற்றோருடன் பள்ளிக்கு அழைத்து வருவதற்கு வசதியாக இப்பள்ளிக்கு, “தாய் நவநீதம் குப்புசாமி அறக்கட்டளை” மற்றும் “ஸ்ரீ ஜெயா கல்வி அறக்கட்டளை” சார்பில், அதன் நிறுவனர் திரு கு.க. செல்வம் அவர்கள் வழங்கியுள்ள 17 இலட்சம் ரூபாய் செலவிலான தனித்தன்மையுடன் வடிவமைக்கப்பட்டுள்ள பேருந்து வாகனத்தின் சாவியை, முதலமைச்சர் கலைஞர் சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. அஷோக் வர்தன் ஷெட்டி இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி இணை ஆணையர் திரு. ஆஷிஷ் சட்டர்ஜி இ.ஆ.ப., துணை ஆணையர்கள் திருமதி பா. ஜோதி நிர்மலா இ.ஆ.ப., திரு எம். பாலாஜி இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

*****

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9